Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Case Number | **CC.No.6/2021** |
| Deposition of | PW- 4 |
| Name | : முருகன் |
| Father's Name/Husband Name | : நாகப்பன் |
| Village | : பொம்மிடி |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03.06.2026**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பொம்மிடியில் வசித்துக்கொண்டு ஓட்டல் வைத்து தொழில் செய்து வருகிறேன்.

கடந்த 2019 ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை பொம்மிடி பாப்பிரெட்டிபட்டி சாலையில் நான் வைத்துள்ள ஓட்டலை தாண்டி ஏற்கனவே நடந்த விபத்து தொடர்பாக பொம்மிடி காவல் நிலைய போலீசார் விசாரணைசெய்துக்கொண்டிருந்தார்கள். அந்த வழியாக சென்ற என்னிடம் ஒரு சாட்சி கையொப்பம் பெற்றார்கள்.

இன்று என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் கையொப்பம் செய்த பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

நான் கையொப்பம் செய்த பின்னிட்டு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிபட்டி**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Case Number | **CC.No.6/2021** |
| Deposition of | PW- 5 |
| Name | : ரியாஷ் |
| Father's Name/Husband Name | : ஜான்பாஷா |
| Village | : பொம்மிடி |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03.06.2026**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பொம்மிடியில் வசித்துக்கொண்டு ஹார்டுவேர் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன்.

இன்று என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதல்ல. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசுதரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக்கி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 2019 ம் வருடம் எனது கடை முன்பு ஒரு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

விபத்து குறித்து பொம்மிடி காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல.

கடந்த 16.09.2019 ம் தேதி காலை 10.45 மணியளவில் பொம்மிடி காவல் நிலைய

போலீசார் எனது கடை முன்பு ஏற்கனவே நடந்த விபத்து தொடர்பாக என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அந்த மகஜரில் நான் சாட்சியாக கையொப்பமிட்டேன் என்றும், போலீஸ் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது மாற்றி சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிபட்டி**